# செய்திகளும் குறிப்புகளும்

**28.05.2022, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 953**

---

## கல்வி

**ஸ்ரீ அரவிந்தர் & ஸ்ரீஅன்னை**

வலப்பக்கத் திறன்கள், புரிந்துகொள்தல், ஆணையிடுதல், தமக்கே உரிய உணர்வால் முடிவெடுத் தல், தகவல்களைப் பற்றிப்பிடித்து உள்வைத்துக் கையாளுதல் ஆகியவற்றைச் செய்கின்றன. வலப்பக்கத் திறன்கள், புரிந்துகொள்தல், ஆணையிடுதல், தமக்கே உரிய உணர்வால் முடிவெடுத்தல், தகவல்களைப் பற்றிப்பிடித்து உள்வைத்துக் கையாளுதல் ஆகியவற்றைச் செய்கின்றன. வலப்பக்க மனம் அறிவின் தலைவனாகும், இடப்பக்க மனம் அதன் பணியாளனாகும். இடமனம் அறிவின் உடலை மட்டுமே தொடுகின்றது, வலமனம் அறிவின் ஆன்மாவை ஊடுருவுகின்றது. இடமனம் ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுள்ள உண்மைகளின் எல்லைகளுக்குள் இயங்குகின்றது. வலமனம் எளிதில் பிடிபடாததையும் இதுவரை உறுதி செய்யப்படாததையும் பற்றிப் பிடிக்கின்றது. மனிதனின் பகுத்தறிவு முழுமையானதாக இருப்பதற்கு இவ்விரு பாகங்களுமே இன்றியமையாதவையாகும். மனமென்னும் கருவியின் எல்லாத் திறன்களையும் மிகச்சிறந்த நிலைக்கு உயர்த்தி, அவற்றை நேர்த்தியாக இயங்கும் திறனுடையவையாகச் செய்யாவிடில் குழந்தையின் கல்வி முழுமையற்றதாகவும் ஒருபுற வளர்ச்சியையே கொண்டதாகவும்தான் இருக்கும்.

மனத் திறன்களில் நான்காவது தளமொன்றும் உண்டு; இந்தத் தளம் மனிதனிடம் இதுவரை முழுமையாக வளர்ச்சியுறவில்லை, இப்போதுதான் படிப்படியாக விரிவான வளர்ச்சியடைந்து வருகிறது, மென்மேலும் முழுமையானதாகப் பரிணமித்து வருகிறது. வழுவாத விவேகம், உள்ளுணர்வால் மெய்மையை அறிதல், அகவெழுச்சியில் பிறக்கும் பழுதற்ற சொற்திறன், மனிதனை தீர்க்கதரிசியாக்கும் மெய்ஞானத்தைக் கூட அளிக்கவல்ல நேரடியான அறிவுக்காட்சி ஆகியவை, அறிவின் மிகவுயர்ந்த தளமாகிய இந்நான்காம் தளத்திற்கே உரிய திறன்களாகும்; மேதைகளிடம் திகழும் சிறப்புத் திறன்களாகவே பெரும்பாலும் நாம் இவற்றைக் காண்கிறோம். இத்திறன்களை அரைகுறையாகவோ, அவ்வப்போதைய மின்வீச்சுக்களாகவோ பெறுவோர் பலர் உளர் எனினும் இத்திறன்களை அவற்றின் உயர்நிலையில் வளர்ச்சியுறப் பெற்றிருப்பவர்களைக் காண்பதரிது. பிழைகளும், மனத்தின் ஏறுமாறான தற்போக்கும், ஒருபுறம் சாயும் கற்பனையும் இத்திறன்களுடன் கலந்து, அவற்றைத் தடைசெய்கின்றன. சிதைவுபடுத்துகின்றன; இக்காரணத்தால், மனிதவினத்தின் மதிப்பிடும் பகுத்தறிவு இவற்றைப் பெரும்பாலும் அவ நம்பிக்கையோடுதான் நோக்குகிறது. எனினும், இத்திறன்களின் உதவியில்லாமல் மனிதவினம் தற்போதைய நிலைக்கு முன்னேறியிருக்க முடியாது என்பது தெளிவு. மாணவனிடம் உள்ள வல்லமைமிக்க, புரிந்து கொள்ளக் கடினமான இந்த பாகத்தை மேதாம்சத்தை என்ன செய்வது என்பது சல்வியாளர் இதுவரை விடை காணாத ஒரு புதிராகும். வெறுமனே படிப்பினையை எடுத்துச் சொல்லும் அறிவுரையாளர், மேதமையை ஊக்கமிழக்கச் செய்யவும், நெரித்து அடக்கவும் தம்மாலியன்ற அளவுக்கு முயலுகின்றார்; முற்போக்கான ஆசிரியரோ, அதை வரவேற்கிறார். மனித வினத்திற்கு இவ்வளவு முக்கியமான இத்திறன்களை நம் கருத்திலிருந்து ஒதுக்குவது இயலாது, அவற்றைப் புறக்கணிப்பது மட மையாகும். தற்போது முழுமையற்றிருக்கும் அவற்றின் வளர்ச்சியை முழுமையடையச் செய்ய வேண்டும்; பிழைகளையும், மனத்தின் ஏறுமாறான போக்கையும் ஒருபுறம் சாயும் கற்பனைகளையும் அவற்றுடன் கலந்துவிடாதபடி கவனத்துடனும் விவேகத்துடனும் விலக்க வேண்டும். ஆனால் ஆசிரியரால் இதைச் செய்ய முடியாது; அவர் தமது தலையீட்டினால் பதருடன் பயிரையும் அழித்துவிடக் கூடும் ஏனைய கல்வி நடவடிக்கைகளில் எவ்வாறோ அவ்வாறே இங்கும், ஆன்மா தனது முழுமையை அடையக்கூடிய பாதையை அதற்குக் காட்டுவதை மட்டுமே ஆசிரியரால் செய்ய முடியும்.

### 3. அறவொழுக்க இயல்பு

மனிதனுடைய மன இயல்பு, அவனுடைய அறவொழுக்க இயல்பை ஆதாரமாகக் கொண்டதாகும்; அவனுடைய அறவியல்பையும் உளவுணர்ச்சிகளையும் முழுமையாக்குவதைப் புறக்கணித்து புத்திக்கு மட்டுமே கல்வியளிப்பது மனித முன்னேற்றத்திற்குத் தீங்கு விளைவிப்பதாகும் ஆனால் மனத்திற்குப் பயிற்சியளிக்கப் போதுமான ஏதோ ஒருவகைப் பாடத்திட்டத்தை வகுத்தளிப்பது எளிய காரியமே எனினும், இன்றைய நிலைக்கு ஏற்ற அறவொழுக்கப் பயிற்சியைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் வழங்குவது இதுவரை இயலாத காரியமாகவே இருந்து வந்துள்ளது. அறநெறியையும் சமயங்களையும் பற்றிய பாடப்புத்தகங்களைக் கற்றுக் கொடுப்பதால் மாணவர்களை அறநெறியும் சமய உணர்வும் உள்ளவர்களாக ஆக்க முயலுவது பயனற்றதாகும், ஏமாற்றமளிப்பதாகும்; ஏனெனில் மனம் வேறு, இதயம் வேறு, மனத்திற்குப் பயிற்சி யளிப்பதால் இதயம் முன்னேற்றமடைந்து விடுவதில்லை. ஆனால் மனப் பயிற்சியால் எவ்வித விளைவுமே இராது எனக் கூறுவதும் பிழையாகும். மனப்பயிற்சி, அந்தகரணத்தினுள் எண்ணங்களை விதைத்துவிடுகிறது; இந்த எண்ணங்கள் பழகிப் போய்விட்டால், அவை நடத்தையின்மீது விளைவுகளை உண்டாக்குகின்றன. ஆனால் அறநெறிப் பாடப்புத்தகங்களிலுள்ள தீமை என்னவென்றால், அவை உயர் விஷயங்களைப் பற்றிய சிந்தனைக்குச் செயற்கையான இயந்திரத் தன்மையைக் கொடுக்கின்றன; இத்தகைய செயற்கையான, இயந்திரத் தன்மையான எதுவுமே நல்ல பயனை அளிக்கவியலாது.

மனிதனின் அறவியல்பின் மீது செயலாற்றும்போது மூன்று அம்சங்கள் மிக முக்கியமானவையாகும். அவையாவன: உளவுணர்ச்சிகள், சமஸ்காரங்கள் (ஏற்கனவே உருவாகி விட்ட பழக்கங்களும் தொடர்புகளும்), ஸ்வபாவம் (இயல்பு). ஒருவன் அறவொழுக்கப் பயிற்சியைத் தனக்கே அளித்துக் கொள்வதற்கான ஒரே வழி, அவன் சரியான உணர்ச்சிகளுக்கும், மிக உயர்தரமான தொடர்புகளுக்கும், மனத்திலும் உளவுணர்ச்சிகளிலும் உடலிலும் மிகச் சிறந்த பழக்கங்களுக்கும் தன்னைப் பழக்கப்படுத்திக்கொண்டு, தன் சாரமாகிய இயல்பின் அடிப்படையான உந்துதல்களைப் பின்பற்றிச் சரியான விதத்தில் செயலாற்றுவதாகும். குழந்தைகள் மீது ஏதாவது ஒழுக்கமுறையைச் சுமத்தலாம், ஒரு குறிப்பிட்ட மாதிரியில் அவர்களை ஒழுங்கமைச்கலாம், விரும்பத்தக்க ஒரு பாதையைத் தண்டனையின் மூலம் பின்பற்றச் செய்யலாம், அவர்களுடைய இதயமும் இயல்பும் கவரப்படாவிடில், இவ்வாறு வலிந்து சுமத்தப்படும் விதி, இதயமற்ற போலி நடத்தையாகிவிடும் பொதுவிதியைச் செயற்கையாகப் பின்பற்றுவதாகிவிடும். அடிக்கடி அது கோழைத்தனமான கீழ்ப்படிதலாகவே இருக்கும் ஐரோப்பாவில் இவ்வாறுதான் செய்யப்படுகிறது; இதன் விளைவாக, பள்ளியிலும் வீட்டிலும் இருக்கும் கட்டுப்பாடாகிய கடிவாளம் நீக்கப்பட்டவுடனேயே, இளைஞர்கள் இன்பக் களியாட்டங்களில் மூழ்குதல் என்னும் கவனிக்கத்தக்க பழக்கத்தில் இறங்கிவிடுகின்றனர். ஐரோப்பிய வாழ்வின் முக்கிய அம்சமாகிய போலிச் சமூக நடத்தையும் இதன் விளைவேயாகும் ஒருவன் எதை வியந்து போற்றி ஏற்றுக் கொள்கிறானோ, அதுவே அவனுடைய ஒரு பாகமாக ஆகிறது; மற்றதெல்லாம் ஒரு முகமூடியேயன்றி வேறில்லை அவன் தனது பள்ளியிலும் வீட்டிலும் நடைமுறையில் இருந்த ஒழுக்க விதிகளைப் பின்பற்றியதைப் போலவே, சமூக ஒழுக்கமுறை யையும் பின்பற்றுகிறான்; ஆனால் தனது மெய்யான வாழ் வாகிய சொந்த உள் வாழ்வினைத் தன் விருப்பத்திற்கும் தீவிர ஆசைகளுக்கும் ஏற்ப வாழ்வதற்குத் தனக்கு சுதந்திரம் உண்டு என்று அவன் கருதுகிறான். மேற்கூறியவையெல்லாம் உண்மையெனினும், அறநெறி, சமயம் ஆகியவற்றைக் கற்பிக்காமல் முற்றிலும் புறக்கணிப்பது, இனத்தைச் சீரழிக்கச் செய்வதாகும்.

*(தொடரும்...)*

## அ றி க் கை க ள் ( R e p o r t s )

**ஆரோவில்வாசிகள் அவை உறுப்பினர்களின் அறிக்கை** (A Statement from members of the Residents' Assembly)

**ஆரோவில் குடியிருப்பாளர்கள் ஆகிய நாங்கள் கீழ்கண்டவாறு தெரிவிக்க விரும்புகிறோம்:**

1. பல தசாப்தங்களாக தடைகள், உண்மைகளை சூழ்ச்சித் திறத்துடன் கையாளுதல், அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்குத் தேவையான தொடர்ச்சியான எதிர்ப்பு, நீதிமன்ற வழக்குகள் போன்றவற்றின் மூலம் ஆரோவில் திட்டத்தின் வளர்ச்சியைத் தடுத்துவரும் ஒன்றிணைந்த குடியிருப்பாளர்களின் நிலைப்பாட்டை நாங்கள் ஏற்கவில்லை. அவர்கள் எங்கள் பெயரில் பேசுவதில்லை.
2. ஆரோவில்லின் கூட்டு வாழ்க்கை, சமீபத்திய ஆர்ஏடி-இன் போது, சமூக ஊடகங்களிலும், உலகெங்கிலும் உள்ள மக்களிடமும் அதிக வாக்குகளைப் பெறுவதற்காக வீடியோக்கள் மூலம் பரப்பப்பட்டது போல் ஒரு அரசியல் பிரச்சாரமாக மாற்றப்படுவதை நாங்கள் ஏற்கவில்லை. இச்செயல்முறையை நாங்கள் புறக்கணித்தோம், அதன் முடிவை ஏற்கவில்லை.
3. ஆரோவில்லின் அமைப்பு, எண்களின் அரசியல் விளையாட்டைப் பற்றியது அல்ல, மாறாக 28 பிப்ரவரி 1968 அன்று ஸ்ரீஅன்னை வழங்கிய இரண்டு முன்நிபந்தனைகளின் அடிப்படையில் ஒரு நிலையான மற்றும் ஒன்றுபட்ட சமூகக் கட்டமைப்பை உருவாக்குவது பற்றியது: அவர் அகக்காட்சியில் கண்ட நகரத்தில் 50,000 பேர் ஆரோவில் சாசனத்துக்கு ஏற்ப வாழ வேண்டும்.
4. அங்கீகரிக்கப்பட்ட கேலக்சி முன்மாதிரியின் அடிப்படையில் மாஸ்டர் பிளானுக்கு இணங்க நகரத்தின் வளர்ச்சியை செயல்படுத்த தேவையான பணிகளை முன்னெடுப்பதில் ஆரோவில்வாசிகள் அவையின் தற்போதைய, சட்டபூர்வமான செயற்குழுவை நாங்கள் ஆதரிக்கிறோம். பல தசாப்தங்களாக ஆரோவில்லில் சில பிரிவுகளால் இது நிறுத்தி வைக்கப்பட்டது.
5. ஆரோவில்வாசிகள் அவையின் (ரெசிடென்ஸ் அசெம்பிளி) பங்கு ஆரோவில்லின் புற நிறைவேற்றத்திற்கு உதவுவதாகும், அதைத் தடுப்பது அல்லது சிதைப்பது அல்ல. ஆரோவில்லின் நீண்டகால முடக்கம், தவறான தகவல்கள் மற்றும் தவறான அறிக்கைகள் பரவுவதை நிறுத்தவேண்டும், அதிகாரப்பூர்வமாக அமைக்கப்பட்ட பணிக்குழுக்கள் ஆரோவில்லிற்கு உள்ளும், நிர்வாகப் பேரவை மற்றும் ஆரோவில் பவுண்டேஷன் செயலர் ஆகியோருடன் ஒத்துழைத்து தங்கள் பணியைச் செய்யவேண்டும்.

*தேவஸ்மிதா, சத்யகாம், ரவீந்திரன், பாலு, காளியானந்தா, லீவ், லக்ஷய், ஆண்டிம், ஸ்ரீஜிதா, டோபி, உமா, ஜோயல், சிந்துஜா, டொமினிக் எச்., வெங்கடேஷ், சந்திரேஷ், திவ்யா, பூாக், சஞ்சய், செல்வராஜ், கலியா, முரியல், குணா, குணா (டி.எஸ்.), ஷங்கர், அனு (விகாஸ்), பாலாஜி, ஜோதி பிரசாத், சாய் சுரேஷ், வெங்கடேஷ், ஆனந்தி, கோவிந்த், பகவன்தாஸ் மற்றும் பிற ஆரோவில்வாசிகள்.*

---

## த க வ ல் ( I n f o r m a t i o n )

**ஒருங்கிணைந்த ஆரோக்கியம்** (Integral Health)

கிளாசிக்கல் ஹோமியோபதி, இன்டெகரல் ரிக்ரெஷன் தெரபி, குழந்தை நல சிகிச்சை

**2001 முதல், அனைவருக்கும் மாற்றுச் சுகாதார சிகிச்சைகளை நாங்கள் வழங்கி வருகிறோம்**

**ஒகுபாகா -** முந்திரி மரங்களில் பூச்சிக்கொல்லி மருந்துகளைகளை தெளிப்பதால் ஏற்படும் தீய விளைவுகளைக் கையாள்வதில் இந்த ஹோமியோபதி மருந்து உதவியாக உள்ளது.

எங்களது மருந்து பெட்டியில் ஒகுபாகா சி30 உள்ளது, இது ஆரோவில் சுகாதாரச் சேவை மையத்திலும் கிடைக்கிறது.

**குழு**

**சிக்ரிட் லிண்டெமன்**, மிகவும் அனுபவம் வாய்ந்த ஹோமியோபதி ஆலோசகர், சர்வதேச பேராசிரியர் மற்றும் டாக்டர் சன்கரன்ஸ் விஸ் ஃபார் ஹீலிங் (Dr. Sankarans WISH4healing) சங்கத்தின் உறுப்பினர் ஆவார். டிரான்ஸ்பர்சனல் ரிக்ரெஷன் தெரபி அமர்வுகளையும் வழங்கி வருகிறார்.

**மலர்** ஹோமியோபதியில் பயிற்சி பெற்று, **தமிழில் ஹோமியோபதி ஆலோசனை வழங்கி வருகிறார்**, ஹோமியோபதி முதலுதவி சிகிச்சைகள், பிசி நோய் குணப்படுத்தும் மருந்துகளையும் வழங்கி வருகிறார்.

32 **நோய் குணப்படுத்தும் மருந்துகளுடன் கூடிய முதலுதவி கிட்** உள்ளது, ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் விளக்கம் உள்ளது. முதலுதவிக்கு ஹோமியோபதி மருந்துகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அறிய விரும்பினால் தயவுசெய்து எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

24-7, **காத்திருப்போர் பகுதியில் உள்ள எங்களது மருந்து பெட்டியிலிருந்து, மருந்துகள் இலவசமாகக் கிடைக்கும்:**

ஒகுபாகா சி 30, **பிசி ஷாக் ட்ராமா, பிசி அலர்ஜி, பிசி நீரிழிவு, பிசி உயர் இரத்த அழுத்தம் போன்றவை மற்றும் நாள்பட்ட நோய்கள், மன அழுத்தத்திற்கு மேலும்** 70 **பிசி மருந்துகள் உள்ளன.**

**ஹார்மொனி, சமதா** ஆகிய மருந்துகள், ஸ்ரீ அன்னை மற்றும் ஸ்ரீ அரவிந்தர் ஆற்றலுடன் தொடர்புடைய மருந்துகள் ஆகும். அனைத்து மருந்துகளும் மருந்து பெட்டியில் வைக்கப்பட்டுள்ளன. எப்போது வேண்டுமானாலும் வந்து எடுத்துக் கொள்ளலாம். பக்க விளைவுகள் இல்லை - நிரந்தரமான நன்மையை அளிக்கும் .

ஆரோவில்வாசிகள் மற்றும் புதிதாய்ச்சேர்ந்தவர்களுக்கு **ஆலோசனைகள்** இலவசமாக வழங்கப்படுகிறது, மற்றவர்களிடமிருந்து நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. பொதுவாக ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், குஜராத்தி, தமிழ் ஆகிய மொழிகளில் ஆலோசனை வழங்கப்படும்.

திங்கள் முதல் வெள்ளி வரை, தினந்தோறும், காலை 9 - 12.30 மணி வரை அலுவலகம், முதலுதவி கிட், பிசி மருந்துகள் ஆகியவற்றை **மலர்** நிர்வகித்து வருகிறார்,
உங்கள் உடல்நலம் அல்லது உளவியல் பிரச்சனைகளுக்கு சிறந்த தீர்வுகாண integralhealth@auroville.org.in மின்னஞ்சல் முகவரியில் எங்களைத் தொடர்புகொள்ளத் தயங்க வேண்டாம்.
இன்டகெரல் ஹெல்த், பிரயாத்னா – 2623669, சிக்ரிட் - sigrid@auroville.org.in, www.sigridlindemann.com,
அதீதி - 9428429642, மலர் - malar@auroville.org.in, 9080054843

---

## **அறிவிப்புகள்** (Announcements)

**மல்டி மீடியா சென்டர் அரங்கம் (எம்எம்சி, டவுன் ஹால்)**
(MULTI MEDIA CENTRE AUDITORIUM (MMC, Town Hall)

**2022, ஆரோவில் திரைப்பட விழா - 02.06.2022, வியாழன் அன்று சினிமா பாரடைஸில்**
2022, ஆரோவில் திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட ஒரு திரைப்படம் பொதுமக்களுக்காக திரையிடப்படும்.
02.06.2022, வியாழன் அன்று இரவு 8 மணிக்கு, டவுன்ஹால், சினிமா பாரடைஸில் **தி பாத் (The Path)** திரைப்படம் திரையிடப்படும்.
**தி பாத் (The Path) – ஜப்பானில் பார்வதி பவுல்** - 2019, ஜப்பான், ஆவணப்படம், ஜப்பானிய மொழி, வங்காளம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில், நேரம் - 1மணி 17 நிமிடம்.
இயக்குனர், எழுத்தாளர், தயாரிப்பாளர்: சகுராகோ அபே - நடிகர்கள்: பார்வதி தாஸ் பவுல், தோஷியுகி சுசிடோரி
*தயவுசெய்து கோவிட் -19, தற்போதைய நிலையான வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றவும். **கட்டாயமாக முகக்கவசம் அணியவும்.***

---

**ஆரோவில் குடியிருப்பாளர்களின் பதிவேடு** (Register of Residents)

ஆரோவில் குடியிருப்பாளர்களின் பதிவேட்டைப் (Register of Residents) புதுப்பிப்பதற்காக, 08-05-2022 அன்று செயற்குழுவால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட படிவத்தை ஆரோவில்லில் வசிப்பவர்கள் அனைவரும் நிரப்பும்படி நினைவூட்டப்படுகிறது. இந்த இணைப்பில் உள்ள கூகுள் படிவத்தைப் பயன்படுத்துவது விரும்பத்தக்க தேர்வு ஆகும்:
https://docs.google.com/forms/d/e/1FAIpQLSe21uw2qubAJ8WFp5pBWaINX4k0pKP3Ky_a0g1rZQkWIi73MA/viewform

மாற்றாக, நீங்கள் ஆரோநெட் அல்லது ஆரோவில் பவுண்டேஷன் வரவேற்பு மேசையில் உள்ள காகிதப் படிவத்தைப் பூர்த்தி செய்து, கையொப்பம் இட்ட காகிதப் படிவத்தை ஆரோவில் பவுண்டேஷன் செயலர் அலுவலகத்தில் அளிக்கலாம்.

**10-06-2022-க்கு முன் இதைச் செய்து முடிக்கவும், இதனால் ஆரோவில் குடியிருப்பாளர்களின் பதிவேடு விரைவில் புதுப்பிக்கப்படும்.** *துணைச் செயலர், ஆரோவில் பவுண்டேஷன்*

---

**பிடிபிஎஸ்-இல் இருந்து** (From PTPS)

அன்பார்ந்த சமூகத்தவருக்கு,
உங்களுக்காக எங்களிடம் நிறைய செய்திகள் உள்ளன.
உங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் கிடைக்கும் இடமாக, 'பழைய' புத்தூரை மாற்ற நாங்கள் நிறைய மாற்றங்களைச் செய்து வருகிறோம். இதை நீங்கள் பாராட்டுவீர்கள் என்று நம்புகிறோம்.
பல பொருட்கள் இடம் மாற்றப்படுகின்றன, நீங்கள் இதை ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.
நீங்கள் உள்ளே நுழையும்போது வலது பக்கம் அனைத்து ஆரோவில், ஆரோவில் மண்டலப் பகுதிகள், இயற்கைமுறையில் உற்பத்திச் செய்யப்படும் பொருட்கள் இருக்கும். ஆரோவில் மற்றும் ஆரோவில் மண்டலப் பகுதியில் உற்பத்திச் செய்யப்படும் நீடித்தத்தன்மை உடையப் பொருட்களை நீங்கள் எளிதில் கண்டுபிடிக்கக்கூடிய ஒரே இடத்தில் வைக்கப்படும்.
இடதுப்பக்கம் உண்மையில் 'எஞ்சியிருப்பது' மற்றும் அந்த நீடித்தத்தன்மை இல்லாதப் பொருட்கள் குறைவான எண்ணிக்கையிலும், அளவிலும் வைக்கப்படும்! உங்கள் விருப்பத்தை நாங்கள் ஒருபோதும் கட்டுப்படுத்த மாட்டோம்.
உங்களுக்கு உண்மையிலேயே தேவைப்பட்டால், சிறந்த மாற்று அல்லது இருப்புப் பொருட்களைக் கண்டறிய முயற்சிப்போம்.
உங்களுக்குத் தேவையானப் பொருட்கள் காணவில்லை என்றால், அதை எங்களுக்குத் தெரியப்படுத்தி எங்களுக்கு உதவுங்கள்.

இது நிச்சயமாக ஒரு படிப்படியான செயல்முறை ஆகும், இதற்கு கால அவகாசம் தேவைப்படும். எனவே, தாங்கள் பொறுமையாக இருந்து எங்களுக்கு ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம். நீங்கள் பங்களிக்க முடியும் என்று நினைத்தால் வந்து எங்களுக்கு உதவுங்கள்! சில இடங்கள் மற்றும் ஷெல்ஃப்புகளை காலியாக வைத்திருக்கும் ஆர்டர் முறையை நாங்கள் மாற்றுகிறோம். ஆனால் சரியான பொருட்களை உடனே வாங்க விரும்புகிறோம். பொறுமை காத்தமைக்கு நன்றி!
பிக்-அப் அல்லது டெலிவரிக்கு தயாராக இருக்க மின்னஞ்சல் ஆர்டர்களை பரிசோதித்து வருகிறோம். நிறுவனங்கள், சேவைகள், விருந்தினர் இல்லங்கள், பள்ளிகள் தாங்கள் பயன்படுத்தும் பொருட்களுக்கான சேவைகளுக்கு எங்களால் தள்ளுபடியை வழங்க முடியும். மேலும் மாத இறுதியில் தேவைக்கேற்ப ஜிஎஸ்டி இன்வாய்ஸ்களை நாங்கள் வழங்க இயலும்.
தயவுசெய்து மின்னஞ்சல் மூலம் உங்கள் ஆர்டர்களை செய்யவும்: ptps@auroville.org.in தொலைபேசி: 0413-262 3091

## அனைவருக்கும் ஆரோவில் முட்டைகள்... (Auroville eggs for all...)

அன்பார்ந்த சமூகத்தவருக்கு,
ஆரோஆர்ச்சார்டில் தற்போதைய முட்டை உற்பத்தி குறித்து உங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றோம்.
எங்கள் பண்ணையிலுள்ள கோழிகள் வாரத்திற்கு 5500 முட்டைகள் இடுகின்றன.
கடந்த வாரம் வரை, இது ஃபுட்லின்க் மூலம் எளிதாக விநியோகிக்கப்பட்டது. இருப்பினும், பலர் ஆரோவில்லில் இருந்து வெளியூர் செல்வதாலும், பள்ளிகள் மூடப்பட்டதாலும், சமீபத்திய விலை உயர்வுகளாலும், இந்த முட்டைகளை ஆரோவில் சமூகத்தில் விநியோகிக்க முடியவில்லை.

ஆரோஆர்ச்சார்ட் அல்லது வேறு ஏதேனும் ஆரோவில் பண்ணையில் இருந்து முட்டைகளை பெறுவதற்கு முன்னுரிமை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
auroorchard@aurovill.org.in-இல் எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பி, நீங்கள் ஃபுட்லின்க்கிலோ அல்லது நேரடியாக எங்களுக்கோ உங்கள் ஆர்டரை செய்யலாம்.
இப்பிரச்சினையை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து உங்களுக்கு ஏதேனும் ஆலோசனைகள் இருந்தால் அவற்றை எங்களுடன் பகிர்ந்து கொள்ளவும்.
உங்கள் ஆதரவுக்கு நன்றி. சேவையில், *ஆரோஆர்ச்சார்ட் குழு*

---

## குழந்தை பிறப்பு (Baby born)



அன்பார்ந்த நண்பர்களுக்கு,
14.05.2022 அன்று எங்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது என்பதையும், இக்குழந்தைக்கு *ரிதன்யா சாய்* என்று பெயரிட்டுள்ளோம் என்பதையும் தங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.
மகிழ்ச்சியுடன், தாத்தா பாட்டி T.S.மணி & பத்மாவதி, பிரட்டர்னிட்டி. பெற்றோர்: மோகன் குமார் & பவித்ரா.
சகோதரன்: யதீஷ் சாய். அன்புடன், *பவித்ரா*

---



## மராத்தான் யோகா நிகழ்வு (Marathon Yoga event)

ஸ்ரீ அரவிந்தரின் 150வது பிறந்த ஆண்டை முன்னிட்டு, மாத்ரிமந்திர் ஆம்பித்தியேட்டரில் மராத்தான் யோகா நிகழ்ச்சியை அருள்வழிப் பள்ளி நடத்தத் திட்டமிட்டுள்ளது.
23.05.2022 முதல் 21.06.2022 வரை காலை 6 மணி முதல் காலை 7 மணி வரை. (ஜூன் 21 சர்வதேச யோகா தினமாகும், இரண்டு நாட்களையும் உள்ளடக்கியது)
ஆரோவில் சமூகத்தவரும், பள்ளிகளும் இதில் பங்கேற்க அழைக்கிறோம்.
உங்கள் யோகா மேட்டுகளை தயவுசெய்து கொண்டு வாருங்கள். அருள்வழி அணி சார்பாக, *முத்துக்குமாரி, வேலு*

---



## உடற்கல்வி ஆசிரியர் பயிற்சி (Physical Education Teachers Training)

ஆரோவில்லில் ஒட்டுமொத்த உடற்கல்வியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், ஒரு ஆண்டில் 100 மணிநேர உடற்கல்வி ஆசிரியர் பயிற்சித் திட்டத்தை வழங்குவதில் சையர் (SAIIER) மகிழ்ச்சியடைகிறது. இந்தத் திட்டம் ஏற்கனவே உடற்கல்வி கற்பித்துக் கொண்டிருப்பவர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கும், அதே போல் ஆசிரியர்களாக ஆவதற்கு ஆர்வம் உள்ளவர்களுக்கும், தங்கள் பணிக்கான உறுதியான அடித்தளத்தை அமைத்துக் கொள்பவர்களுக்கும் பயனுள்ளதாகும்.

விளையாட்டு அறிவியலில் முனைவர் பட்டம் பெற்ற போர்ச்சுகலைச் சேர்ந்த தன்னார்வலர் ஒருவர், கல்வியியல் மேற்பார்வையில் 20 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் பெற்றுள்ளார், மேலும் அவர் பல்கலைக்கழக அளவில் ஆசிரியர்களுக்கு இத்தகையப் பயிற்சியை அளித்து வருகின்றார். அவருடன் இணைந்து இத்திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதல் 45 மணிநேர அமர்வு தேகசக்தி விளையாட்டு மைதானத்தில் மூன்று வாரங்களுக்கு நடைபெறும்:

**2022, 13 ஜூன் - 3 ஜூலை**

**மாலை 3 மணி - 6 மணி, திங்கள் முதல் வெள்ளி வரை**

இவ்வகுப்பில் தினமும் ஒரு மணிநேரம் டிடாக்டிக்ஸ் (கோட்பாடு) மற்றும் இரண்டு மணிநேரம் பயிற்சி ஆகியவை அடங்கும். இப்பாடத்திட்டத்தில் ஒருங்கிணைந்த கல்வி, விளையாட்டு அறிவியல், பாடத்திட்ட மேம்பாடு, அமர்வு திட்டமிடல், கூட்டுறவு மற்றும் போட்டி விளையாட்டுகள், தகவல் தொடர்புத் திறன் மற்றும் பல உள்ளன.

உங்கள் ஆர்வமிருந்தால், **ஜூன்** 6-ஆம் தேதிக்குள் saiier@auroville.org.in -க்கு மின்னஞ்சல் அனுப்பவும். இந்தத் திட்டம் இலவசம். இதில் சேருவது பற்றி நீங்கள் முடிவு செய்யவில்லை என்றால், முதல் நாள் (ஜூன் 13 மதியம் 3 மணிக்கு தேகசக்தியில்) கலந்துகொண்டு இத்திட்டம் உங்களுக்கு சரியானதா என்று பார்க்க உங்களை வரவேற்கிறோம்.



## வீட்டுவசதிச் சேவை/வீட்டுவசதி வாரியத்திடம் இருந்து
(From the Housing Service/Housing Board)

அன்பார்ந்த சமூகத்தவருக்கு,

வீட்டுவசதி வாரியம்/வீட்டுவசதிச் சேவைக்கு நிர்வாகி தேவை - இது டவுன் ஹாலில் உள்ள வீட்டுவசதி அலுவலகங்களில் முழுநேரப் பணியாகும், மேலும் இதற்கு முழுநேரப் பராமரிப்புத்தொகை உண்டு.
இப்பணி குறித்த முழு விவரத்தைக் கண்டறிவதற்கும், நீங்கள் ஆர்வமாக இருந்தால் கூடுதல் விவரம் தேவைப்பட்டால் அதைப் பற்றி தெரிந்துகொள்ள, housing-coordinator@auroville.org.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதவும்.
அன்புடன், *வீட்டுவசதிச் சேவை/வீட்டுவசதி வாரியம்*

**************

## ஆரோவில் வீட்டுவசதிச் சேவை/வீட்டுவசதி வாரிய நிர்வாகி
(Auroville Housing Board/Housing Service Administrator)

**வீட்டுவசதி வாரியத்திற்கு**

- வீட்டுவசதி வாரிய கூட்டத்திற்கான வாராந்திர நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பகிர்தல்
- வீட்டுவசதி வாரிய கூட்டத்திற்கான குறிப்புகளை எடுத்தல்.
- வாராந்திர கூட்டத்தின் குறிப்புகளை இறுதி செய்தல், அதை சம்மந்தப்பட்ட தரப்பினர் ஒப்புதல் அளித்தவுடன் பகிர்தல்.
- வீட்டுவசதி வாரியத்திற்கு அழைப்பாளர்களை நிர்வகித்தல் (அழைப்புகள் மற்றும் நேரங்கள்).
- வீட்டுவசதி வாரியத்தின் மின்னஞ்சல் இன்பாக்ஸை நிர்வகித்தல்.
- மற்ற பணிக்குழுக்களுடன் மின்னஞ்சல் தொடர்பு.
- வீட்டுவசதி வாரிய கூகுள் குழு டிரைவ்களை நிர்வகித்தல்.
- தேவையான உறுப்பினர்கள் எண்ணிக்கை (கோரம்) அடைந்தவுடன் வீட்டுவசதி வாரிய உறுப்பினர்களால் தயாரிக்கப்பட்ட வரைவுகளை அனுப்புதல்.
- உறுப்பினர்களால் ஒப்படைக்கும்போது, வீட்டுவசதி வாரியத்திற்கான வரைவுகளைத் தயாரித்தல்.
- ஆரோநெட் மற்றும் நியுஸ் அண்ட் நோட்ஸில் வெளியிட வீட்டுவசதி வாரியத்தின் இரண்டு மாத அறிக்கையைத் தயாரித்தல்.

**வீட்டுவசதிச் சேவைக்காக**

- வீட்டு பழுதுபார்ப்பு இன்பாக்ஸை நிர்வகித்தல்.
- அனைத்து வீட்டுச்சேவை பழுதுகளின் நிலையை கண்காணித்தல்.
- கூகுள் டிரைவில் வீட்டுப் பழுதுபார்க்கும் குழு கோப்பு முறையைப் பராமரித்தல்.
- நிர்வாகப் பணிகளுடன் பழுதுபார்ப்பு ஒருங்கிணைப்புக் குழுவிற்கு உதவுதல்.
- வீட்டுவசதிச் சேவை குழுவிற்கான தற்காலிக நிர்வாகிப் பணிகள் மற்றும் அப்பணிகள் நிகழும்போது உதவுதல்.

--ஆரோவில் வீட்டுவசதிச் சேவை சார்பாக (எமி, அரவிந்த், ஓலே, சாவித்திரி, வெங்கடேஷ்)
தொலைபேசி: (0413) 262 2658. house@auroville.org.in
பொதுமக்களுக்கான நேரம்: திங்கள் - காலை 10.00-12.30. செவ்வாய் முதல் வெள்ளி வரை காலை 9:30-12:30
சனிக்கிழமை: கணக்கு மட்டும், காலை 10:30-12.30

---

## பிரம்மனஸ்பதி ஷேத்ரம் – ஸ்ரீ அன்னை. ஸ்ரீ அரவிந்தர், மையம்
(BRAHMANASPATI KSHETRAM - The Mother and Sri Aurobindo Centre)

**2022 ஜூன் மாதத்திற்கான வழக்கமான செயல்பாடுகள்**

வியாழன்தோறும் மாலை 6 – 6.30 மணிக்கு தியானம் நடைபெறும்.
07.06.2022 & 21.06.2022, செவ்வாய் அன்று மாலை 5.30 – 6.30 மணி வரை, இராமநாராயணா அவர்கள் **தொகுதி 7 இலிருந்து ஸ்ரீ அன்னையின் கேள்வி பதில்களைப் படித்தல்.**
03.06.2022 & 24.06.2022, வெள்ளி அன்று மாலை 4 – 5 மணி வரை, **ஒளி பொருந்திய பாதை (The Sunlit Path)** தனலட்சுமி அவர்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் படித்தல்.
27.06.2022 , திங்கள் அன்று மாலை 5 மணிக்கு, **புதிதாய்ச்சேர்ந்தோருக்காக ஆரோவில் பற்றி இராமன் உரையாற்றுகிறார்.**
14.06.2022, புதன், பௌர்ணமி அன்று: மாலை 6 மணிக்கு, 30 நிமிடத்திற்கு, ஸ்ரீ அரவிந்தர் காயத்ரி மந்திரம் பாடுதல்.
எண். 3/134, களத்து மேட்டுத்தெரு, இடையஞ்சாவடி, ஆரோவில். Kshetram2014@auroville.org.in

### ஸ்ரீ அன்னையின் அருள்மொழிகள்

**வேலையைப் பற்றி கவலைப்படாதே. எந்த அளவிற்கு அமைதியாக வேலை செய்கிறாயோ அந்த அளவிற்கு அது நல்ல பலனைத் தரும்.**
**நீ மேற்கொண்ட வேலையை முழுமனத்துடன் செய். உனக்கு எப்பொழுதும் அருளின் உதவி கிடைக்கும்.**

| ***உலகக் கவிதை இயக்கம் (World Poetry Movement)*** | ***புல்லாங்குழல் இன்னிசைக் கச்சேரி (Flute Recital)*** |
|---|---|
| *உலகக் கவிதை இயக்கத்தில்* இணைந்து, பல்வேறு மொழிகளில் நாம் கவிதை வாசிக்கப் போகிறோம், நாம் அனைவரும் இணைந்து "பூமி எங்கள் வீடு", என்ற பாடப் போகிறோம். அது இத்தருணத்தில் மிகவும் கைவிடப்பட்டுள்ளது.<br>குழந்தைகள், இளைஞர்கள், பெரியவர்கள், கவிஞர்கள், வாசகர்கள், பாடகர்கள், இசைக்கலைஞர்கள் ஆகிய அனைவரையும் இதில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்... உலக சுகாதார நிறுவனம் (WHO) ஆரோவில்லில் குரல் கொடுக்க நம்மிடம் உள்ள அனைத்தையும் தருகிறது!<br>**மே 29, ஞாயிற்றுக்கிழமை**<br>**மாலை 5.30 மணிக்கு**<br>**பூமிகா ஹால்-பாரத் நிவாஸ் .**<br>நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.<br><br>அன்னையின் கரங்களிலும், கருணையிலும்<br>ஆனந்தி-அயுன். சி.ஏ.எல்.ஐ. மற்றும் அமெரிக்கா ஒன் சார்பில்<br>பாரத் நிவாஸ். இந்தியா அரங்கம், ஆரோவில் | பாரத் நிவாஸ் 50வது ஆண்டு நிறைவை முன்னிட்டு<br><br>**மேஸ்ட்ரோ ஷஷாங்க் சுப்ரமணியம் அவர்களின்**<br>**புல்லாங்குழல் இன்னிசைக் கச்சேரி**<br>**ஹரி சுந்தர்ராமன் அவர்கள் மிருதங்கம்.**<br>**திருச்சி கிருஷ்ணசுவாமி அவர்கள் கடம்.**<br><br>**இடம்: ஸ்ரீ அரவிந்தர் அரங்கம், பாரத் நிவாஸ்.**<br>**நாள்: 28.05.2022, சனிக்கிழமை, இரவு 8 மணி.**<br>**காலம்: 1 மணிநேரம் 15 நிமிடம்**<br><br>கோவிட் விதிகளின்படி முகக்கவசம் அணியவும். உங்கள் வாகனங்களை வாயிலுக்கு வெளியே நிறுத்தவும்.<br>பாரத் நிவாஸ். இந்தியா அரங்கம், ஆரோவில் |



## பாகா (Bhaga)

மே 18 புதன்கிழமை அதிகாலையில், லுமினோசிட்டி குடியிருப்பில், நமது அன்புக்குரிய நண்பரும் சகோதரியுமான பாகா (கிறிஸ்டியன் ஓடில் கேப்ரியாவ்) அவர்கள் அவர்தம் 77வது வயதில் தமது உடலை விட்டு நீங்கினார். கடந்த ஆண்டில் அவர் புற்றுநோயால் அவதியுற்று வந்தார். அவரது செல்லுலார் உள்ளுணர்வு மற்றும் அவரது வாழ்நாள் முழுவதும் தீவிரமான பரிணாம ஆராய்ச்சி மூலம் பெறப்பட்ட நுண்ணறிவு ஆகியவற்றின் மூலம் அதனை சரிசெய்து வந்தார்.

அல்ஜீரியாவில் பிரெஞ்சு வம்சாவளியைச் சேர்ந்த பாகா, 1972 ஆகஸ்ட்டில் ஆரோவில்லுக்கு வந்தார். அக்கால ஆரோவில்லின் பல்வேறு வளரும் பள்ளிகளில் இரண்டாவது மொழியான பிரெஞ்சு மொழியின் ஆசிரியராகத் தொடங்கி, மாத்ரிமந்திரில் பணிபுரிந்த அவர், படிப்படியாக ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை ஆகியோரின் போதனைகளில் ஆழமான மற்றும் முழுமையான ஆராய்ச்சியை நோக்கித் திரும்பினார். இதன் விளைவாக, அவர் 1984-இல் 'பரிணாம ஆய்வகம் - மனித ஒற்றுமைக்கான மையம்' ('Laboratory of Evolution – Centre for Human Unity' (LOE-CHU) ஒன்றை பாரத் நிவாஸில் தொடங்கினார். அங்கிருந்து ஆரோவில் பற்றி ஸ்ரீ அன்னை கூறியவற்றின் விரிவான தொகுப்பைச் சேகரித்தார். இந்த மையம் பல ஆண்டுகளாக வளர்ச்சியடைந்து இன்றும் செயல்படுகிறது. கடல் ஆக்கிரமிக்கும் வரை, 18 ஆண்டுகள் அவர் வாழ்ந்த கடற்கரையில் உள்ள 'ரெப்போ' என்ற இடத்தில் அவர் வசித்தது நம்மில் பலருக்கு நினைவில் இருக்கும்.

பாகா அவர்கள் உற்சாகமும் சைகையும் கூடிய, எப்போதும் புன்னகையுடனும், அன்பாகவும் சிநேகமாகவும் பழகும் இயல்புடையவர். அவரின் பல பயிற்சிப்பட்டறைகள், உரைகள், தனிப்பட்ட ஆலோசனைகள் ஆகியவற்றுக்காகவும், இணையத் தொடர்புகளுக்காகவும், நமது ஒருங்கிணைந்த யோகத்திற்காக அவர் தொடர்ந்து பணி ஆற்றியதற்காகவும் நினைவுகூரப்படுவார். *வாழ்நாள் முழுவதும் ஆரோவில் பரிசோதனையின் உண்மையான தன்மைக்காக வழிகாட்டியமைக்காகவும், அவருடைய உறுதியான அகப்பணிக்கும் நன்றி. அது நிறைவு பெறட்டும். ஓம்~*

## ஸ்ரீ அன்னையின் அருள்மொழிகள்

**வேலை நன்றாக நடக்க வேண்டுமானால் ஒத்துழைப்பும் பரஸ்பர நல்லெண்ணமும் இன்றியமையாதவை ஆகும். நிவேதனம் இருந்தால் வேலையை அதிக எளிதாகவும் மகிழ்ச்சியோடும் செய்ய முடியும். ஆனால் எவரையும் அவர்களுடைய சக்திக்கு அதிகமாக வேலை செய்யச் சொல்லக் கூடாது.**